உ
சிவமயம்

Register p as a N
paper i eylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான ... 1

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வருஷம் ஆவணிமீ உஅ ௨ ( 1943 செப்டம்பர்மீ 13 திங்கட்கிழமை) [இல. சச


## யாழ்ப்பாணம் சைவ மகளிர் கல்லூரி

வெள்ளிக்கிழமை ஆரம்பமாயது

சென்ற வெள்ளிக்கிழமை 10 மணியளவில் உள்ள சுபமுகூர்த்தத்தில் யாழ்ப்பாணஞ் சைவமகளிர் கல்லூரி அரசாங்கசபைத் தலைவரும் கல்லூரி மனேஜரும் ஆகிய ஸேர். டப்ளியூ. துரைசாமியவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழா நடைபெறமுன்னர் உரிய கிரியைகள் சிறப்பாக நடைபெற்றன. சைவமகளிர் கல்லூரி ஒன்று அவசியம் வேண்டும் என்ற கருத்தை ஆதரித்து முயன்றவர்களுள் ஒருவராகிய மாகாணத்தலைவர் திரு. M. பிரசாத்தும் கூட்டத்திற்குச் சமுகமளித்தனர். ஷை கல்லூரியின் அபிவிருத்தியையிட்டு ஸேர். துரைசுவாமியவர்களும் அதிகார் நாகநாதரவர்களும இம்மாகாணத் தலைவர் திரு. M. பிரசாத்தும் பேசினார்கள்.

## செல்வச்சந்நிதித் தேர் தீர்த்தம்

தொண்டமானாறு, செல்வச் சந்நிதித் தேர் தீர்த்த உற்சவங்கள் சென்ற வியாழக்கிழமை (9-9-43) வெளிவந்த இப்பத்திரிகைப் பிரசுரத்தில் பெருந் தவறுகக் குறிக்கப்பட்டிருக்தமைபற்றிப் பெரிதும் பச்சாத்தாபப்படுகின்றோம். அத்தவறைச் சந்நிதிப் பெருமானும் அன்பர்களும் பொறுத்தருள்க. செல்வச் சந்நிதியில் தேர்த்திருவிழா இற்றைத் தினத்திலும் (13-9-43), தீர்த்தம்நாளை (செவ்வாய்க்கிழமை) காலையும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சைவசித்தாந்த மகாசமாஜத் தேர்வுகள்

மனுத்தாளும் கட்டணமும் அனுப்பவேண்டிய தேதி

சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தாரால் நடத்தப்படும் சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்தல்களிற் பிரவேசிக்க விரும்புவோர் மனுத்தாளையும் கட்டணத்தையும் வரும் செப்டெம்பர் மாசம் 20-ம் தேதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைத்தல் வேண்டும். சைவப்புலவர் தேர்வுக்குக் கட்டணப்பணம் ரூபா 2; இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கு ரூபா 1. கட்டணப் பணத்தையும் நிரப்பிய மனுத்தாளையும் முந்தியே தம்மிடம் அனுப்பி வைப்பின் தாம் மேற்படி தேர்தல்களை நடத்தும் காரியதரிசிக்கு அவற்றைச் சேர்ப்பித்தலாகுமெனவும், மனுத்தாள்கள் வேண்டுவோர் தமமிடம் பெற்றுக்கொள்ளலாமெனவும் வட்டுக்கோட்டை திரு. S. அண்ணாமலைப்பிள்ளையவர்கள தெரிவிக்கின்றார்.

## யாழ்ப்பாணப் பகுதிக்குப் புதிய ஏ.ஆர்.பி. தலைவர்

யாழ்ப்பாணம் செப் 9—

யாழ்ப்பாணம் சென்.பத்திரிசியார் கல்லூரியின பழைய தலைவரான சங்கை பிதா ஸி. ஜே. ஆர். வேதவனத்தின் ஸ்தானத்துக்கு வட பகுதி விமானத் தாக்குதற் பாதுகாப்புக் கட்டுப்பாட்டதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# பட்டின சபையிற் பரபரப்பு

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியுற்றது

### அங்கத்தவர்கள் போதாமையால் திடீர்முடிவு

சென்ற வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குப் பட்டினசபை மண்டபத்தில் யாழ்ப்பாணப் பட்டின சபையின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. தலைவர் திரு. K. ஐயாத்துரை தலைமை வகித்தார். மிஸ்றர். ஆரியபத்திராஜாவைத் தவிர, மற்றைய அங்கத்தினரனைவரும் சமுகமளித்திருந்தனர்.

சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டபின்னர், காலஞ்சென்ற அத்வக்காத் திரு. C. அருளம்பலம் J. P. அவர்களின் தேகவியோகத்தைக் குறித்து அநுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டம் பின்போடப்பட வேண்டுமென்று திரு. R. சிவகுருநாதர் கொண்டுவந்த பிரேரணையைத் தலைவர் தள்ளிவைத்தார்.

1944ம் ஆண்டு தொடக்கம் தாழ்த்தப்பட்டோருக்குத் தகுந்த ஆசன வசதிகள் அளிக்காத தேத்தண்ணீர்க்கடை சாப்பாட்டுக்கடை ஆதியவற்றிற்கு 'லைசென்ஸு'கள் அளிக்கக்கூடாது என்ற தீர்மானத்தைத் திரு. C. பொன்னம்பலம் பிரேரித்தார்.

செவாலியர் S. அருளானந்தம் அதை ஆமோதித்தார்.

தாம் அதை அங்கீகரிக்க முடியாதென்று திரு. R. சிவகுருநாதர் சொன்னார். தலைவர் அப்பிரேரணையை ஆதரித்தார். இவ்விஷயம் நன்ருக ஆலோசிக்கப்படவேண்டிய தென்றுதலால், அடுத்த கூட்டத்துக்கு விடப்படவேண்டுமென்று மிஸ்றர். S. M. அபூபக்கர் கூறினார். திரு. M. சினனத்துரை அதை ஆமோதித்தார். பிரேரணை அடுத்த கூட்டத்திற்கு விடப்பட்டது.

#### நம்பிக்கையில்லாத் தீர்மானம்

இச்சபையைத் திருப்திகரமற்ற முறையிலே நடத்துகின்றமையால், இச்சபை அதன் தலைவராகிய திரு. K. ஐயாத்துரைமீது நம்பிக்கையை இழந்துவிட்டது என்ற பிரேரணையைத் திரு. V. S. இராமநாதன் பிரேரித்தார்.

தலைவரின் நடத்தையைப் பற்றிப் பேசும்போது தலைவர் அக்கூட்டத்தில் இருக்கலாமோ என்று மிஸ்றர். S. M. அபூபக்கர் கேட்டார். தலைவர் மிஸ்றர். அபூபக்கரை உட்காருபடி கட்டளையிட்டார்.

திரு. இராமநாதன் எழுந்து திரு. நாகேந்திரத்தை வேலையினின்று விலக்கப்படுவது, சம்பந்தமான விஷயம் விவாதிக்கப்பட்டபோதெல்லாம் தலைவர் சபையைச் சபைக்குச் சரியான வழிகாட்டாமற் போயினர் என்றும் கூறினர்.

மிஸ்றர். S. M. அபூபக்கர் பிரேரணையை ஆமோதித்துப் பேசும்போது, திரு. ஐயாத்துரை தலைவராயிருக்கத் தகுதியற்றவரென்றும் மரியாதையை ... ற்றவரென்றும், சேர்மன் ... பதவிக்கு தேவையான ... று ஸ்திரமற்றவரென்றும் மனத்திற் கோளாறும் பலவீனமுமுடையவரென்றும் பேசினர். இப்பிரேரணை அவரை அவ்வாறிருக்காமற் செய்வதற்கன்றி அவரை அகற்றுதற்காக வல்லவென்றும் அவர் தமது பதவியைத் தாமாகவே விட்டு விலகுதலே தக்கதென்று தம் ஆலோசனை கூறுவதாகவும் பேசினர்.

மிஸ்றர். பத்திராஜாவின் தீர்மானம் அன்றைய நிகழ்ச்சிகளில் ஏன் சேர்க்கப்படவில்லையென்று திரு. சுப்பையா வினவினர். தலைவர் தமது நியாயங்களைப் படித்தார். இந்நிலைமையில் தலைவரும் மற்றைய அங்கத்தவரும் ஒருவரையொருவர் வைது பேசினர். கூட்டம் சிறிதுநேரம் பேய்களின் கூட்டமாகவே காணப்பட்டது.

இந்நிலைமையில் தலைவர் கூட்டத்தை அடக்கி ஒழுங்கு நிலவும்படி செய்ய முடியாமலிருப்பதாற் கூட்டத்தைப் பின்போடுவதாக திரு. C. பொன்னம்பலம் பிரேரித்தார். திரு. சுப்பையா அதை ஆமோதித்தார். தலைவர் அப்பிரேரணையைப் பொருட்படுத்தாமல் திரு. இராமநாதன் கொண்டுவந்த பிரேரணைக்குச் சமாதானங்கள் சொல்லிக்கொண்டு நின்றார். திருவாளர்கள். C. பொன்னம்பலம் V. சுப்பையா, V. S. இராமநாதன் ஆகியோர் கூட்டத்தைவிட்டு வெளியேறினர். அதன்பின், திரு. ஐயாத்துரை நம்பிக்கையில்லாத தீர்மானத்தைச் சபையின் சம்மதத்துக்கு விட்டார். திரு. அபூபக்கர் அதற்குச் சார்பாக வாக்களித்தார். திருவாளர்கள் R. R. நல்லையா, M. சினனத்துரை, செவாலியர் S. அருளம்பலம் ஆகியோரும் தலைவர் தாமும் அதற்குமாருக வாக்களித்தனர். திரு. R. சிவகுருநாதர் எப்பக்கத்திறகும் தமது வாக்கை உபயோகிக்கவில்லை.

திரு. ஐயாத்துரை அப்பிரேரணை தோல்வியுற்றதென்று தெரிவித்தார். அதன்பின, வேறொரு விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நிலைமையில் மிஸ்றர். அபூபக்கரும் கூட்டத்தைவிட்டு வெளியேறினர். ஆகவே கூட்டத்தை நடத்துதற்கு வேண்டிய அங்கத்தவர் போதாமையால கூட்டம் திடீரென முடிவுற்றது.

## 'அகௌண்டெண்டுக'ளுக்குப் பயிற்சி

### இலங்கையிலேயே ஏற்பாடு செய்யும் உத்தேசம்

இலங்கையிலேயே 'அக்கௌண்டெண்டு'களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் திட்டமொன்றை வகுப்பது பற்றித் தொழில நிர்வாகசபை அதன் கடைசிக் கூட்டத்தில் ஆலோசனை செய்ததென்று தெரிகிறது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## இத்தாலி யுத்தத்தை நிறுத்தியதேன்?

### ஹிட்லருக்குப் படோகிளியோ தந்தி

ரோமாபுரி செப் 9—

இத்தாலி சரணாகதியடைந்தமைக்குக் கீழ்க்காணும் காரணங்களைக் கூறி ஹிட்லருக்கும் ஏனைய அச்சுத் தலைவர்களுக்கும் படோகிளியோ நேற்று அனுப்பிய தந்தியின் சாரம் இத்தாலிய செய்தி ஸ்தாபனத்தால் இன்று வெளியிடப்பட்டது.

இத்தாலியின் பாதுகாப்புகள் தகர்ந்து போயின. நேசதேச முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. தொழில் க்ஷீணித்துவிட்டது. சத்திகள் சம்பூரணமாகத் தீர்ந்துபோயின. புகையிரதங்களும் கப்பல்களும் அழிக்கப்பட்டுவிட்டன.

இத்தாலி முற்றாகப் பாழாய்ப் போவதைத் தவிர்ப்பதற்காகச் சத்துருவிடம் இத்தாலி யுத்தத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது.

சத்துரு எப்படியாவது எங்கேயாவது எப்பொழுதாவது பலம் பொருந்திய படைகளுடன் இறங்கக்கூடியதாயிருந்தது. அவனுடைய பலமும் படைகளின் தொகையும் நாளுக்குநாள் அதிகரித்து எதிர்ப்பு அனைத்தும் முறியடிக்கப்பட்டன. தேசம் பாழாகியது தற்பாதுகாப்பில் நம்பிக்கைக்கு இடமில்லாத போது ஜனங்களை யுத்தஞ் செய்யும்படி கேட்பது உசிதமல்ல.

## தேயிலைத் தொழிற்சாலை தீக்கிரையாயிற்று

நாவலப்பிட்டி செப் 6—

நாவலப்பிட்டியிலிருந்து ஏறக்குறைய 12 மைல் தூரத்திலுள்ள கெனிவேர்த் தோட்டத்தின் தேயிலைத் தொழிற்சாலை இன்று நண்பகல் தீக்கிரையாகியது. குறித்த மூன்றுமாடி கட்டிடத்திலிருந்த எஞ்சின் மட்டுங் காப்பாற்றப்பட்டது.

## மனைவியைக் கத்தியால் தாக்கியவர்

நக்வாளைப் பகுதியிலுள்ள மாசிம்புலாவைச் சேர்ந்த டபிள்யூ. கே. புஞ்சி அப்புஹாமி அவரது மனைவியைக் கத்தியால் தாக்கிக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஒருவருடக் கடுங்காவற் சிறை விதிக்கப்பட்டது. விசாரணையின்போது எதிரி சாட்சியங் கூறுகையில் தாம் குறித்த கொலையைக் கருதிச்செய்யவில்லையென்று தெரிவித்தார்.

## ஜப்பானிய மந்திரிசபைக் கூட்டம்

நியூயார்க் செப் 9—

இத்தாலிய சரணாகதியையும் ஜப்பானின் கொள்கையையும் ஆலோசிப்பதற்காக ஜப்பானிய மந்திரிசபையின் விசேஷ கூட்டமொன்று நடைபெற்றதென்றும் நிலைமையை எவ்வாறு சமாளிப்பதென்பதை மந்திரிசபை பரிசீலனை செய்ததென்றும் டோக்கியோ றேடியோ அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஆவணி௴ ௨௮௳ திங்கட்கிழமை

## இத்தலியின் அதோகதி

இத்தலி யொருவாறு பிருத்தானிய அமெரிக்க தத்துவ ராச்சியத்தினரிடம் சரண் புகுந்து விட்ட தெனலாம்; ஆனுற் சரண் புகுந்தும் அந்த நாட்டின் கதி ஆபத்தான நிலைமையிலேயே இருக்கின்றது. இத்தலிக்கு இதுகாறும் துணையாக நின்ற ஜர்மனியர் இப்பொழுது முழுப் பகைவராயினர். அவ்வளவோ டமையாது இததலி நாட்டின் வடபாகத்தையும் சில பிரதான பட்டினங்களையும், தலைநகர மாகிய ரோமையும் ஜர்மனியர் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு அரண் செய்யலாயினர். மிகவும் தொன்மையோடும் சமய சம்பந்தமான ஸ்தாபனங்களோடுங் கூடிய ரோமை நகர்மீது குண்டுப் பிரயோகஞ் செய்தல் முறைபல்ல என்ற நோக்கங்கொண்டபிருத்தானிய அமெரிக்க தத்துவராச்சியத்தினரும், ரோமை நகரம பகைவர் கைப்பட்டமையால், அதனை மீட்பதற்குக் குண்டுப் பிரயோகஞ் செய்ய வேண்டிய நிலைமையிலேயே விடப்பட்டனர். சுருங்கச் சொல்லுகில இத்தலிய நாடு இருதலைக கொள்ளியினுள் எறும்பையொத்து இடர்ப்படுதலாயிற்று. ஐரோப்பாக் கண்டததிலே ஜர்மனியருககும் பிருத்தானிய அமெரிககருககும் நடக்க விருக்கும் பெருஞ் சமரில் இத்தலி பிரதான யுத்த பூமியாக அமையப் போகின்றதென்பது ஆராச தந்திரிகள பலருடைய அபிப்பிராயம்; அநத அபிப்பிராயம் தவருனதலல வெனபது சில நாட்களாகக் கிடைககுந தந்திச் சமாசாரங்களைக கொணடு சொலலத் தககதாம்.

வட இத்தலிப் பகுதியில் ரேம்மெல சேனுதிபதியாக்கப்பட்டு நின்று யுத்தம் நடத்துவதாகச் சொலலப்படுகிறது. பிறின்னர்ப் பாளையத்திற பெரும் யுததம் நடைபெறுகின்றது. ஜெனேவா, ஸ்பெஸியா முதலிய தானஙகளும் பொலக்னு, வெரோனு, சிறிமொனு, திறியெஸ்ற் முதலாம தானஙகளைச் சேர்நத இடஙகளும் இப்பொழுது ஜர்மனியராற் பிடிக்கப்பட்டுள்ளனவாம. இததலிய சேனுதிபதியாகிய மார்ஷல் படகக்ளியோ ரோமை நகரை விட்டகன்று விட்டாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையில் ஜர்மனியரும இததலியரும் ரோமைத் தாக்குவதில்லை யெனச் சமயோசிதமான ஓர் உடன்படிக்கை செய்திருக்கின்றார்களெனவும் சமாசாரம் பிறக்கின்றது. இத்தலியர் ஜெர்மனியருக்கு மாருக யுத்தந் தொடங்குவதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன வென்றும் ஆனுல், வெளிப்படையாக இத்தலியர் ஜர்மனியருக்கு மாருகப் போர்க்கறை கூறுவரோ என்பதை இப்பொழுது சொல்ல முடியா தென்றும் பேசப் படலாயின. இவைகளை யெல்லாம் உற்று யோசிக்குமிடத்து இத்தலியின் இப்போதைய நிலைமை 'ஆபத்தான தென்று மாத்திரஞ் சொல்ல முடியுமே யல்லாமல், அதற்குமேல ஏதுஞ் சொல்ல முடியாம லிருக்கின்றது.

இவை இங்ஙனமாக, சென்ற ஆறுமாச காலமாக மௌனஞ் சாதித்துக் கொண்டிருந்த ஹேர். ஹிட்லர் இந்தச் சமயத்தில் தம்மவருக்குச் சில வெளி வெளியிட்டுள்ளார். முஸோலினி இன்னமும் தம்முடைய நண்பன் ரூனென்றும் ஆனுல், படக்கிளியோ துரோகியென்றும் இத்தலியர் இடையில் இப்படிச் செய்வார்களென்பதைத் தாம் முந்திபேயறிந்திருந்ததாகவும், இத்தலியர் நிலையான பெலமுள்ள சாதியின ரல்ல ரெனவும், பகைவர் ஆகாயப்படை கொண்டு நாட்டுள சிறிது பயத்தை ஆக்கி வருகின்ருர்களென்றும் ஆனுல், அதைத் தவிர்த்தற்கான ஆயத்தங்களெல்லாஞ் செய்யப்படுகிற வென்றும யுத்த காலத்தில் அநுசரிகக வேண்டிய உபாயங்களை உத்தேசித்துத் தாம் ஒரு யுதத முனையிற் பின்வாங்க வேண்டியும் நேரு மென்றும் கருத்துப்பட, ஹிட்லர் கூறுகின்ருர்; ஆயினும ஹிட்லருடைய பேச்சு முந்திய பேசசுக்கள் போலச் சூரத்தனத்துடன் விரவுதலன்றிச் சோர்வுடையதாகவே காணப்படுகின்றது. இத்கலியின் வீழ்ச்சியை, ஒருபோது இனிமேல நடக்க விருக்கும் பாரிய கொடிய யுத்ததறகு ஆரம்ப மெனறுங் காத்திருககலாகும்.

---

## விவாகம்

*

### கதிரவேலு-தையல் நாயகி

புங்குடுதீவுக் கிராமச் சங்கத் தலைவர் திரு. V. பசுபதிப்பிள்ளை யவர்களின் புதல்வரும் சுகாதார என்ஜினியர் பகுதியிற் கடமை பார்ப்பவருமாகிய திருவளர் செல்வன் P. கதிரவேலு அவர்களுக்கும் வர்த்தகராகிய திரு. V. பொன்னையா அவர்களின் புதல்வி திருவளர் செல்வி தையல்நாயகி அம்மாளுக்கும் நிகழும் 1943ம் ஆண்டு செப்டம்பர்௴ 15-ந் திகதி புதன்கிழமை இரவு 8-24 மணியளவில் விவாகம் நடைபெறும்.

நண்பர்களுஞ்சுற்றத்தவர்களும் சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

புங்குடுதீவு,
10-9.43.

(Mis. 122 13.9.43)

இலக்கியப் பகுதி:

# திருப்பூவண நாத ருலா

[ க. கி. ந. ]

VI

அயன், முன்னொருபோது ஏற்பட்ட கோபத்தால் தன் முடியை அரிந்த சங்கரனுக்குப் பின்னுமொருகாற் கோபம் வரின் அன்னரை யாவர் தடுக்க வல்லார் என்று அஞ்சி அப்பெருமான் திருவுள்ளமாவதற்காக, மின்னைத் திரட்டி மிகவும் பிழிந்து சாம்புநதப் பொன்னையுருக்கிப் புடமிட்டு ஒன்ருகக் கூட்டிப் பிடித்துக் குழைத்து மதிநுட்ப மெல்லாங் காட்டி அழுதூறு பருவத்துப் பெண்ணுருவாக்கி, அழகைக் குடியேற்றி, திலோத்தமையின் அழகு தானும் இவ்வழகுக்கு எள்ளத்தனையும் ஒவ்வாது என்று சொல்லும் வண்ணம், வெதும்பாத கங்கை உள்ளம் வெதும்பவும், கலங்காத மலைக் கன்னி கலங்கவும், மற்ற நங்கையர் நாணவுங் கூடியதாகப் படைத்த அரிவை (20—25) யொருத்தி பாங்கியர் பலரோடு நின்ருள். நின்றவள் அவர்களுள் தன் உயிர்ப் பாங்கியா யுள்ளா ளொருத்தியை அழைத்துக்கொண்டு செய்குன்றில் ஏறினுள். ஏறிஆங்கு அவளையிருத்தி, செழுங் களபச் சேற்றினையணிந்து, தானணிந்த பொன்னுபரணங்களை யெல்லாம் அவளுக்குப் பூட்டினுள். பூட்டி, அவளுடைய சரீரத்தைப் புல்லினுள். அகமகிழ்ந்தாள். கற்பூர தாம்பூலங் கொடுத்தாள். பிற்பாடு அவளை நோக்கி, "என்னுருயிரனையாய்! நீ என்னுள்ளக் கருத்தெல்லாம் அறியாயோ?" என்று கேட்டாள். பாங்கியும், யானெவ்வாறு அறியமுடியும்? என் கருத்தைப் பூவணங் கோயில் கொண்டார்தாம் அறியத் தரும்" என்ருள். "ஆமாம். அவரறிவது உன்னைக் கொண்டல்லவோ?" என்ருள் அரிவை. என்ருட்கு, எவரறிவுந் தாமறியும் ஈசனும், தன்னழகுக் காருமொவ்வாத் தானுவும் ஆகிய பேரம்பலவாணன் உன்னழகைப் பார்ப்பதற்காகவே நாளை பவனி வரும்" என்று கூறினுள் பாங்கி. என்ற அளவிற் கார்க்குழலரிவையும் உள்ளங் களிப்பெய்தினுள். தீர்த்தன்மேலுள்ள ஆசை இன்னும் விரியப் பெற்ருள். முலை விம்மப் புளகமுற்ருள். காமம் வளர்ந்தேறிற்று. மாலையும் வந்தது. வரக்கண்ட அவள் மயங்கி "மறலியின் நிறம் முழுச் சிவப்போ?" என்ருள். தென்றலும் அரவம் போல வந்தது. வந்தது கண்டு, "கொடிய மதன் மலையிலுள்ள புலியை வாலுருவி விட்டான்" என்ருள். வெண்ணிலவை வெண்ணெருப் பென்ருள். குயில் வாயில் விடமிருக்கின்றதென்ருள். மாரன், தாழைமலரையணியாததன் பகைவராகிய சிவபிரான்மீது எய்யாமல் ஏழைமீது அம்பை எய்கின்ருனே. இவன்மதி இருந்தவா றென்னே!" என்ருள். உயிர்த்துயிர்த்து நெஞ்சம்வாடித் தளர்ந்து அச்சிவபிரான திருவைந்தெழுத்தே புணையாக யாமக்கடலை நீந்தியேறினுள். கடவுட் சாமவுலி காலை வருவானென் றென்று அடர் பொற்பணி திருத்தினுள். திருத்தி ஆடையை இடையிலே இறுக்கி, இல்கடந்து வீதியில் வந்தாள். அவ்வமயத்துத் திருப்பூவணநாதனுடைய தேர் வரக் கண்டாள், "நாளைவரும்" என்றுரைத்த குற்றேவற் பாங்கியை முன்னர்க் கும்பிட்டாள். "பின்னர், தேவர் தேவனைக் கும்பிட்டாள். அவன்றன் [illegible] கண்டாள. காவி [illegible] பருகினுள்; காமுற்ருள். மாலைத்துயர் நீங்க அவ்விறைவனது வலக்கண்ணுகிய காலைக் கதிரைக்கண்டு கைதொழுதாள். இரைந்து மெல்லவருந் தென்றலின் பகை தீரும்படியாக எம்பெருமானது செய்ய திருவாபரணமாகிய பாம்பைச் சேவித்தாள். வெண்ணிலவின் பகைநீங்க அப்பெருமான்றன் தண்பதாம்புயத்திற் ருழ்ந்தாள் (தக்கன் யாகத்திற் சந்திரனைச் சிவபெருமான் திருவடியால் தேய்த்தது இங்கே உணரத் தக்கது) வரிக்குயிலுக்கு அஞ்சுந் தொழிலை மாற்றுதற்காகப் பெருமானது திருக்கரத்தைக் கண்டு தரிசித்தாள் (தக்கன் யாகத்தில் இந்திரன்கொண்ட குயில்வடிவின் இறகைச் சிவபெருமானது திருக்கரம் வெட்டினமையின், குயிலாலுண்டாகும் வருத்தத்தைப் போக்கிக்கொள்ளுதற்கு அதனைத் தரிசித்தாள் என்றபடி) கருப்பு வில்லைக் கையிற்பூணும் மதன் நடத்தும்போர் தவிரும்படியாகப் புட்பவன வரணனுடைய நெற்றிக் கண்ணைக்கண்டு வாழ்த்தினுள். தன் பகையையெல்லாம் போக்கவல்ல பகைகளை அவனுருவிற் கண்டாள். "கண்டோம்" என்று ஆனந்த மயக்கங் கொண்டாள். அம்மயக்கந் தெளிந்து அறிவு வருமுன்னர் அரனுர் தேரும் அவ்வீதியை விட்டு அகன்றது.

பிறிதோரிடத்து, ஞானப்பேரின்பந் தேடுமவராசைக்கு மாற்றுமருந்தென்ன வருந்தெரிவை (26-31; இப்பருவ வருணனையை ௩௪௨-ம் கண்ணி தொடக்கம் ௩௭௩-ம் கண்ணி வரையுள்ள பகுதியிற் காண்க) யொருத்தி பூங்காவிற் சென்று தனித்திருந்து, ஓர் ஓவிய நூல் (சித்திர நூல்) வல்லானை அழைத்துப் பூவணநாதன் அஞ்சொற் பொன்னனையாட்கு அன்று அளித்த மாவணக் காதையை வகுத்து எழுதி ஓவியத்திற் காட்டுக என்று அவன் கைநிறையப் பொன்னைக் கொடுத்தாள். கொடுப்ப, அவனும் ஒரு படத்திற்றீட்டி, அவள் முன் சென்று இருந்து பிரமதேவர் கையாற்செய் பொன்னனையாய்! இதோபார் பொன்னனையாள் மாதரசு வாழும் பொன்மனை. அவள் பொழுதுபுலருஞ் சமயத்தவையைப் புனலிலேபோய் மூழ்கும்படிபார். பின் கண்மணியாகிய ருத்திராக்கமணி பூண்டு மனங்காமுறு வெண்ணீறணிந்து இருக்கும் பெற்றியைப்பார். பின் திருவைந்தெழுத்தைச் செபிப்பது பார். தியானஞ்செய்து சிவனைத் திருவர்ச்சனை செய்துமுடித்து, கை குவித்திருக்குங் காட்சியைப்பார். பின் ஆயத்தோடும் அங்கணனைச் சேவிப்பதற்காகக் கோயிற் புகுந்து நின்ற கொள்கைபார். ஆங்கு சந்நிதியில் சுத்தநிருத்தஞ் செய்யுங் கோலத்தைப்பார். அவ்வாறு நிருத்தம் புரிந்து அங்கு நின்று அரிதிற் போந்து மனைக்குள் இருக்கும்படி பார். அம் முருந்து நகையாளது மனைக்குள் மொய்த்து ஈண்டிச்செல்லும் திருத்தொண்டர் திரளைப்பார். சோமசுந்தரக் கடவுள் எடுத்த சித்த வேடத்தின் எழிலைப்பார். மாளிகை முன ஒருபால், சிவனுராகிய யோகபட்டச் சித்தர் இறுமாந்திருக்குஞ் செய்கைபார். அதனைக் கண்டு எதிர்சென்று அவன்றன் மலர்க்கால் பணிந்து அன்பெனனும் மயல்கொண்டு அவள எதிர்நிற்குங் கொள்கைபார். "உன்கரு

தொடர்ச்சி 5-ம பக்கம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக சதுர்த்தி விரதம்

(இவ்விஷயம் கொழும்பு விவேகாநந்தசபையாரின் அநுசரணையில் நியாயவாதி N. நடராசா (K. C.) அவர்களின் பாரியார் கொழும்பு வானொலி மூலமாகப் பேசியதாகும்.)

திருவுங் கல்வியுஞ் சீருந்
தழைக்கவும்
கருணைபூக்கவுந் தீமையைக்
காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம்
பழுக்கவும்
பெருகுமாளத்துப் பிள்ளையைப்
பேணுவாம்.

சிவனன்பிற்குரிய செல்வர்காள்!

இன்றைய தினமானது அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாகி அருளொடு நிறைந்து உயிர்க்குயிராகி ஆன்மாக்கள் குறையை நீக்கும் வண்ணம் எழுந்தருளி விளங்கும் சிவபிரானதும், அருட்சத்திவடிவாகி உலக மாதாவாய் விளங்கும் உமாதேவியாரதும், மூத்த திருக்குமாரனாகிய விநாயகப் பெருமான் தோற்றியருளியதும், அப்பிள்ளையார் துஷ்ட நிக்கிரகஞ் செய்து நல்லோர்க்கருள் செய்ததும், அன்பர் பலரும் அன்பினால் வழிபட்டும் விரதாதி நியமத்தோடு பூசித்தும் அவ்விநாயகரனுக்கிரகம் பெற்றதுமாகிய சதுர்த்தியுங் கூடிய ஒரு புண்ணியத் திருநாளாகும்.

விநாயகப் பெருமானின் அருளுக்குரிய இவ்விரதத் திருநாளில அவரது அருட் குணங்களைப் பற்றியும், விரதமனுட்டிக்கும் முறை அதன் மகிமையைப் பற்றியும் நம்பறிவிற் கெட்டிய அளவிற்குச் சிறிதேனும் அறிந்து கொள்வது நல்லதாகும்.

சைவசமயிகளாகிய நாமெல்லோரும் ஒவ்வொரு நற்கருமங்களுஞ் செய்யத் தொடங்கும்போது, அவற்றிற் கெவ்விதமாகவேனும் இடையூறு நேராதிருக்கும்படி, விநாயகப் பெருமானை வணங்கித் துதித்து அன்னவரின் இன்னருட்கு இலக்காகுகின்றோம்.

விநாயகன் என்பதற்குத் தனக்கு மேலாகிய நாயகன் இல்லாதவன என்று பொருள் கொள்ளப்படும். விநாயக மூர்த்திக்கு விக்கினேஸ்வரன், பிள்ளையார், கெஜானனன், மயூரேசுவரன், பாலச் சந்திரன், சிந்தாமணி, கணேசர், கணபதி, வல்லபைக் குரியான் எனப் பல நாமங்களில் சில தனிமையாகவும், சில அடைமொழி கொடுத்தும் வழங்கி வருகின்றன.

சிவபிரானும் உமாதேவியாரும் ஓர் சித்திர மண்டபத்தில் உலாவ் வரும்போது, சிவபிரான் தமது சங்கற்பத்தால் விசித்திர வர்ணங்களால் ஒன்றி னெதிரில் ஒன்ருக எழுதப்பட்ட இரு யானைகளின் தோற்றத்தைக் கொடுத்தபிரணவ சித்திரத்தினின்றும் யானை முகத்துடன் விநாயக மூர்த்தியைத் தோற்றுவித்தருளினர்.

உயிர்களைக் காக்கும் பொருட்டு ஓங்கார ரூபனாக உதித்த பிள்ளை பெற்றோரை வணங்கி நின்றார். அப்பிள்ளை அன்பர்க் கருள் புரியுஞ் சிவபிரான் எண்ணப்படி கணநாதராய் விளங்கினர்.

இதனைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும,

"பிடியதனுருவுமை கொளமிகு
கரியது
வடிகொடு தனதடி வழிபடு
மவரிடர்
கடிகணபதி வர அருளினன்
மிகுகொடை
வடிவினர் பயில்வலி
வலமுறை யிறையே"

என்னும் பாசுரத்தால் விளக்கிச் சிவபெருமானின் கருணைத் திறத்தைப் புகழ்ந்தருளினர். இப்பாசுரத்தைத் தேவாரம் ஓதுபவர்கள் காப்பாக ஓதுவதுண்டு.

அப்பர் சுந்தரரும் சில பதிகங்களில் விநாயகப்பெருமானைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்கள்.

பிள்ளையாரிடம் வேத முதலிய கலைகளை நேரிற் கேட்டுக் கற்றுணர்ந்த நம்பியாண்டார்நம்பி தேவாரத் திருமுறைகளிருக்குமிடத்தைத் தெரிவிக்கும்படி பிள்ளையாரை வேண்டித் துதித்துச் சிதம்பரத்திலிருக்குமிடத்தை யறிந்து கொண்டதுமன்றித் திருத்தொண்டர் சரித்திரத்தையும் அப்பிள்ளையாரிடமே கேட்டறிந்து கொண்டார்.

சைவ சித்தாந்த முதனூலாகிய சிவஞானபோதத்தை இயற்றியவராகிய மெய்கண்டதேவரும், திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பிள்ளையாரிடமே சகல கலைகளையுங் கற்றவராவர்.

இதனால் விநாயக மூர்த்தியானவர் தம்மை மெய்யன்போடு துதிக்கும் அடியார்க்கு, எவ்விதமான குறைகளிருந்தாலும் அவைகளை நீக்கி இன்னருள் புரிவார் என்பது திண்ணம். அதுவுமல்லாமல் சைவத் திருமுறைகளை நாமெல்லோரும் மெய்யன்போடு ஓதி நற்கதியடைவதற்கும், சைவ சித்தாந்தம் உலகிற் பரவிச் சைவம் தழைப்பதற்கும் மூலகாரணராயுள்ளவர் அடியார்க் கின்னருள் புரிந்து காக்கும் கணநாதரேயாவர்.

தெய்வக் குழந்தைகளேனும் அல்லது தெய்வாம்சம் பெற்ற குழந்தைகளேனும் பிறக்கும்போது உலகில் அதர்மம் மேலிடுவது போல் விநாயகப் பெருமான் பிறக்கும்போதும் கயமுகனென்னுமோர் அசுரன், தேவரைத் துன்புறுத்திக் கொடுங்கோல் ஆட்சி புரிந்துகொண்டிருந்தான்.

அவன் மனத்தை யடக்கி மாதவமியற்றிய மகதனென்னும் முனிவனுக்கு, அம்முனிவன் தாமசகுணத்தின்பாற் பட்டிருந்த நேரத்தில், அவனெதிரில அவன் விருப்பைப் பெறக் காத்து நின்ற விபூதி யென்னும் அசுரமாதிடத்தில் யானைமுகத்துடன் பிறந்தவன். அக்கயமுகன் கடுந்தவமியற்றிச் சிவபிரானிடம் தான் ஆயுதத்தாலும், ஓர் ரூபத்தாலும், அழியாத வரம்பெற்று, தனக்கொப்பாரும் மிக்காருமில்லாது, தேவரையும் முனிவரையும் துன்புறுத்தி, அசுரருக்கு நன்மை புரிந்து வந்தான். அவனது கொடுமைக் காற்றாது தேவர் விநாயக மூர்த்தியிடம் முறையிட, அவர் அவர்களுக்கு அபயமளித்து, அவ்வசுரனுடன் போர் புரிந்து, தன்னுடைய ஒரு கொம்பினால் அவனைக் குத்திக் கிழிக்க அவன் ஒரு பெருச்சாளி ரூபங் கொண்டு அவரைத் தாக்க வர, அவர் அப்பெருச்சாளியைத் தனக்கு வாகன மாக்கிக் கொண்டார். அவர் பெருச்சாளி வாகனமாக உடையவராகையால் அவருக்கு மூஷிக வாகனமூர்த்தி யென்ற திருநாமமுமுண்டு.

தேவரும் துன்பம் நீங்கித் தாம் அவ்வசுரனை வணங்கிய முறைப்படி விநாயகப் பெருமானைத் தங்கள், கைகளினால் தங்கள் சிரசில் குட்டியும், கைகளினால மாறிக் காதுகளைப் பிடித்துக் கொண்டு கீழிருந் தெழும்பியும் வணங்கினர்கள். இந்நாளுஞ் சதுர்த்தியேயாகும்.

அகத்திய[illegible] திருந்த [illegible]

ரூபமாகச் சென்று தட்டியூற்றி, சோழவளநாட்டைச் செழிப்புடையதாகச் செய்யுங் காவிரியாற்றைப் பாயச் செய்தவரும் விநாயக மூர்த்தியேயாவர். அகத்தியரும் இவரின் நிஜரூபத்தைக் கண்டதும் தமது கைகளினாற் தலையிற் குட்டி வணங்கினர்.

அன்பர்க்கருளும் தயாநிதியாகிய [illegible] இராவணன் தவஞ்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# பண்டைத் தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

இந்திய சோதிட சாத்திரத்தில் சாயா கிரகங்களாகிய இராகுவும் கேதுவும் நவக்கிரகங்களுள் சேர்க்கப்பட்டுப் பாம்புகளாக உருவகப்பட்டுள்ளன. கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் அதிதேவையுண்டு. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையையும் இக்கிரகங்கள் பாதிப்பனவாகும். நேரப்போகும் கெடுதியைத் தவிர்ப்பதற்குஇக்கிரகங்களைப் பூசிப்பது வழக்கம். அப்படி வணங்கும்போது இராகுவையும் கேதுவையும் பாம்புருவங்களாகவே வழிபடுவது எல்லோருமறிந்ததே. இது பாம்பு வழிபாட்டிற்கு உதாரணமாகும். எக்காரணத்தால் இவ்வழிபாடு ஏற்பட்டது என்பதை ஆராயப்புகுந்தால் உள்ளுறைப் பொருள் நன்ருக விளக்கமுறும்.

இந்துமதக் கற்பனையின்படி இப்பூமியைத் தாங்குவது ஆதிசேஷன் என்னும் பாம்பாகும். அதாவது பூமியைத் தான் சுழலும் இடத்திலிருந்து பெயராதபடி நிலைபெறச் செய்யும் சக்தியையே ஆதிசேஷன் என்னும் பாம்பாக உருவகப்படுத்தியிருப்பது. இச்சக்தியாகிய பாம்பின்மீது மகாவிஷ்ணு சயனித்திருப்பதாகக் கூறும் புராணசரிதம் நுணுகியாராயும்போது இச்சக்தி விஷ்ணுவின் அருட்சக்தியாகும். ஆதலால்தான் அதனைப் பாம்பாக வணங்குவதாகும். யான் முன்னரே விளக்கியபடி, இவ்வுலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாகிய குண்டலினி சக்தி பாம்பு உருவமாயுள்ளது. அதன் நடுவில் சிவபெருமான் வீற்றிருக்கின்றனர்; அச் சத்தியாகிய பாம்பு தனது சுருளை அவிழ்க்கும்போது சிவலிங்கத்தின் மேல் பாம்பு படம் விரித்தாடும் உருவம் தோற்றுகின்றது. இப்பாம்பு சிவபெருமானது அருட்சத்தியாயுள்ளபடியால் அப்பாம்பு வணங்குதற்குரிய பொருளாய் அமைந்தது.

பாம்பு வழிபாடானது ஆழ்ந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பதனை யாம் அறியலாம். பாம்பு வணக்கத்தை நமது சமயநதைச் சேர்ந்த உண்மையான வழிபாடன்று என்று கூறிப் புறக்கணித்திருப்பேன். ஆனால் அதனுடைய உற்பத்தி இன்னதென்று ஆராய்ந்து விளங்கினால் நமது சமய அனுஷ்டானத்திற்கும் தத்துவ அறிவிற்கும் உள்ள சம்பந்தம இன்னதென்று வெளிப்படுத்தவேண்டும் என்னும் ஆசையே இவ்வளவு தூரம் என்னை இழுத்துச் சென்றது. சமய விரோதிகளேயன்றி நமது மதத்தைச் சேர்ந்த இளைஞரும் நமது பழக்க வழக்கங்களை அவற்றின் கருத்தையும் உள்ளுறையையும் தெரிந்துகொள்ளச் சக்தியில்லாமல் ஏகதேசமாகக் குறை கூறுகின்றனர். அவைகளைச் சாவதானமாக ஆராய்ந்தபின்னரே அவர்கள் அவற்றைப்பற்றிக் கண்டிக்கப் புகுதல் வேண்டும்.

பழையய தமிழ் நூல்களில் நாகர் என்னும் சாதியினர் குறிக்கப்பட்டுளர். நாகம் என்னும் சொல்லுக்குப் பாம்பு என்னும் பொருள் உள்ளபடியால் ஆராய்ச்சியாளர் நாகர் என்பவர் பாம்பை வழிபடுவோர் என்று அனுமானித்துள்ளனர். அச்சொல் பாம்பு என்னும் பொருளைத்தவிர மலை என்னும் பொருளையுந் தரும். அது தெய்வலோகத்தையும் குறிக்கும் சொல். இவ்வாறு பல அருத்தங்கள் அச்சொல்லுக்கு இருக்கும்போது நாகர் என்பவரை ஏன் பாம்புகளைத் தொழுவோர் என்று தவருகக் குறிப்பிடவேண்டும்? மலையை வணங்குவோர் அல்லது தெய்வலோகத்தை வணங்குவோர் என்று சொல்லலாமே! பெயர் ஒற்றுமையிலிருந்து மாத்திரம் முடிவு கட்டுதல் தகுதியன்று. இக்காலத்து ஆராய்ச்சியாளர் அற்ப ஆதாரங்கொண்டு பெரிய கொள்கைகளை நிலைநாட்டப் புகுகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்கவாம். சிங்கள சாதியினரைச் சிங்கத்தை வழிபடுவோர் என்று கூறுதல் பொருந்தாது. சிங்களம் என்னும் பெயரில் சிங்கம் என்னுஞ் சொல் வருவதால் அவர்களை அங்ஙனம் கூறப்புகுதல் சரிசியா?

நமது புராணங்களையும் இதிகாசங்களையும் ஆராய்ந்தால் நாகர் சிவ வழிபாடு உடையவர் என்றும் அவ்வமிசத்துத் தலைவர்களாகிய வாசுகி, தக்ஷன், கார்க்கோடகன் முதலியோர் பேரரசர்களாக விளங்கினர்களென்றும் தெரிந்து கொள்ளலாம். நாகர் விசித்திரப் பிராணிகள், பாதி மனித உருவமும் பாதி பாம்பு உருவமுமுடையவர். தேவர்களையும் மனிதர்களையும் சேர்ந்தவரல்லர். அவர்கள் கீழ் உலகங்களில் வசிப்பவர். மனிதர் நடு உலகத்திலும் தேவர் மேல் உலகத்திலும் உள்ளவர். இந்த நாகர்கள் கடைச்சங்க நூல்களிற் குறிப்பிடப்பட்ட நாகர்கள் அல்லர். கடைச்சங்க நூல்களிற் குறிப்பிடப்பட்டவர் தமது பெயரை இந்த நாகர்களோடு தொடர்புடைமையினற் போலும் அப்பெயரால் அழைக்கப்படுவாராயினர்.

இப்போது காணக்கூடாதவும் அடியற்றுப் போனவுமான பல வகைப் பிராணிகள் முன்னொரு காலத்தில் இருந்ததாக யாம் ஆராய்ச்சியால் அறிகிறோம். இதிலிருந்து யாம் யூகிக்கத்தக்கது என்னெனின் முற்காலத்தில் இப்பூமியின் கீழ்ப் பாகத்தில் ஒருவகையான மக்கள் வாழ்ந்திருந்தனரென்பதாம். அவர்கள் இப்போது இல்லாதொழிந்தனர். பழைய நூலாசிரியர்களின் பிரமாணத்தை நாம் ஒதுக்குதல் கூடாது. சீவக சிந்தாமணியில் பெண்மயில் போன்ற ஓர் ஆகாயவிமானத்தின் மூலமாக இரசமாபுரத்தரசி வெளிப் போந்ததாகக் குறிப்பிட்டிருப்பதை ஓர்காலத்தில் பொய்க்கதையென்று கருதினர். இப்போது ஆகாய விமானங்களைப் பார்த்தபின்னர் அது மெய்யென்று நம்பத்தக்கதாக வுள்ளது. இதுபோல கீழ் உலகத்தில் ஓர் வகையான சாதியினர் வசித்தனரென்பது ஆராய்ச்சி முறையில் வெளிப்பட்டால் அப்போது உண்மையென்று எவரும் ஒப்புக் கொள்ளுவர். இது எப்படியாயினும் வேதகாலத்திலும் புராண காலத்திலும் இருந்த நாகர்கள் பாம்பை வணங்கியவர்களல்லர். பண்டை நூல்களில் இவ்வபத்தக் கூற்றுக்குச் சிறிதும் ஆதாரமில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கொழும்பு 'றேடியோ' நிலையம்

ஐய,

நேர்மை தவறாது உள்ளதை உள்ளபடி எடுத்துக் காட்டும் சனோரஞ்சிதமான தங்கள் 'இந்து சாதன'த்தில் கொழும்பு ரேடியோ நிலையத்தைப் பற்றியும் அறிவிப்பாளர் தெரிவைப் பற்றியும் ஒரு விஷயம் பொறித்தருளச் சிறுகோணந்தந்தருள்க.

சில நாட்களுக்கு முன், ஆங்கில அறிவிப்பாளரைத் தெரிவு செய்தவர்கள், ஒருவர் பின் ஒருவராக மூவரை எடுத் தெடுத்தகற்றினார்கள். தெரிவு செய்த 'சபை'யாரின் நேர்மையும் திறனும் நன்றாகத் தெரிகின்றது. தெரியப்பட்டவர்களும் 'இலவு காத்த கிளி'போலாயினர்.

பின், தமிழுக்கு ஒரு அறிவிப்பாளரைத் தெரிய முயன்றார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலக்கத்தைச் சூட்டி—நேர்மையாகத் தெரிவு செய்கிறோம் என்று—காட்டினார்கள். திறமை வாய்ந்தவர்கள்—பண்டிதர்கள் ஆசிரியர்கள பத்திராதிபர்கள் எல்லோருமிருக்கவும், 'திறமை' சோதித்தவர்கள் வடிவாகத் தமது எண்ணத்தைச் சாதித்து விட்டார்கள. இப்படி நடந்து கொள்வது ஒரு காலமும் தருமமாகாது. ஒரு எழுத்துப் பரீட்சையோடு கூடித்தாகப் பார்த்திருந்தால் எவ்வளவு நல்லது. உலகம போற்றும் உத்தமராக உண்மைவடிவினராக 'நேர்முகப் பரீட்சை' நடத்திய பெரியவர்கள வா எல்லாம வல்ல இறைவனை வேண்டி வழுத்துகின்றேன்.

எங்கள் கொழும்பு ரேடியோ நிலையம் மிக 'முன்னேற்' வருவதன் காரணம் தங்களுக்கும் புலனாயிருக்குமென்று கருதுகிறேன்.

இங்ஙனம்,
'செந்தமிழன்'

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

உரிமைத் தத்துவ வழக்கு இல. 679
ஆனைக்கோட்டை T. நமசிவாயம் பெண் காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் ஆஸ்தியைப் பற்றிய விஷயத்தில்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுச் சக்கிடுத்தார் வி. கதிர்காமபிள்ளை உத்தியோக முறையில் தத்துவகாரன்.

மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கமிஷன் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி ஆஸ்தியாலிறுக்கப்படவேண்டிய வைகளை இறுப்பதற்காக 1943-ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 13-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

ஆனைக்கோட்டை இறை, அரங்கேசன்தோட்டம் நில. பர. 9½ யும் கல்வீடும், மண்வீடும், கிணறும் மற்றுமுள்ள பயிர் வகைகளும். எல்லை கிழக்கு, ஐயாத்துரை கைம்பெண் சிவகாமிப்பிள்ளையின் ஆதனம், வடக்கு றோட்டு தெரு. மேற்கு ஒழுங்கை. தெற்கு நவரத்தினம் பெண் மகேஸ்வரியின் ஆதனம். இக்காணியில் சொரியலாய் நாலிலொரு பங்கும், மேற்குறித்த காலஞ்சென்றவளின் ஆஸ்திக்கு நிந்தமாயுரிய கல்வீட்டில் அரைவாசியும், மற்றும் அதைச் சேர்ந்தவைகளனைத்தில் நாலிலொரு பங்கும்.

பெ. முத்துத்தம்பி
வெந்தீஸ் கமிஷனர்

யாழ்ப்பாணம், மானிப்பாய்,
சுதுமலை தெற்கு
1943-ம் ஆ செப்டம்பர் (புரட்டாதி)
மாதம் 7-ம் திகதி

Mis 121—13.9.43

## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருனு அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 98. 5.8—31.12.43)

## தீவுப்பகுதியில் தொண்டர் படையினர்

சென்ற 3-9-43 பிற்பகல் 3 மணியளவில் நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலை மண்டபத்தில் நயினாதீவுக் கிராமச் சங்கத் தலைவர் ஸ்ரீமான் ச. விசுவலிங்கம் அவர்கள் தலைமையில் ஓர் பகிரங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களிலிருந்து பல பிரமுகர்கள் சமுகமாயிருந்தனர், தலைவர் கூட்டத்தின் நோக்கத்தைச் சபையோருக்கு எடுத்து விளக்கினார். பின்னர் ஸ்ரீமான். வி. கார்த்திகேசு தீவுப்பகுதி மோட்டர் சேவிர்ஸ் மனேஜர் அவர்கள் பேசினார். அவர் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது இந்த ஐந்து தீவுகளும் போக்கு வரத்துச் சாதனத்தாலும், தந்தி, டெல்லிபோன் இவைகளினால் துண்டிக்கப்பட்டிருப்பதனாலும் இப்பகுதியிலுள்ளவர்கள் கஷ்டம்வருங் காலத்தில் தாங்களே அவைகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டியவர்களாயிருப்பதினால் இவர்கள் தங்கள் தங்கள் தீவுகளைத் தாங்களே பாதுகாக்க வேண்டியவர்களாயிருக்க வேண்டும் என்றும் அதற்கு ஓர் தொண்டர்படையினர் ஒவ்வொரு தீவிலும் ஸ்தாபித்து நாட்டின் நலன்கருதி உழைக்கவேண்டுமென்றுங் கூறினார்.

பின்னர்த் தொண்டர் படையினர் ஒவ்வொரு தீவுகளிலும் ஸ்தாபிக்கவேண்டும் அதன் மத்திய ஸ்தானம் நயினாதீவில் இருக்கவேண்டுமென்றும் மத்திய ஸ்தானம் தகுதி வாய்ந்த ஓர் தலைவரின் மேற்பார்வையில இருக்கவேண்டுமென்றும திரு. N. செல்லத்துரை அவர்கள் (எழுவைதீவு) பிரேரிக்க திரு. S. கார்த்திகேசு அவர்கள் (நெடுந்தீவு) அனுமதிக்கச் சர்வ சம்மதமாகப் பிரேரணை நிறைவேறியது.

தொண்டர் படையினர் ஸ்தாபிப்பதையிட்டுப் பிரதம சேனாதிபதியிடம் உததாவு கோருமாறு தீர்மானிக்கப்பட்டது.

இவ்வியக்கத்தை நடாத்துவதற்கு ரூபா 10000 பதினாயிரம பதனாயிரம் மானியம் தரும்படி பொதுசனப் பாதுகாப்பு அதிகாரியைக் கேட்கும்படி தீர்மானிக்கப்பட்டது. பிரதம சேனாதிபதியிடம் இருந்து உததாவு கிடைத்ததும், இயக்கம் ஸ்தாபிக்கும்படி தீர்மானிக்கக் கூட்டம் 5 மணியளவில் இனிது நிறைவேறியது.

வி. கார்த்திகேசு,
காரியதரிசி
8-9-43

## விநாயக சதுர்த்தி விரதம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

செய்து பெற்ற சிவலிங்கத்தைக் கையிலேந்திப் பாதசாரியாக வரும் வழியில் அவனுக்கு சலஉபாதி உண்டானது. அச்சிவலிங்கத்தை நிலத்தில் வைத்தால் வேரூன்றி விடுமென்றும் குற்றமுடையதானால் சித்திகொடாதென்று மறிந்தவனாகையால் யாரேனும் வந்தால் கொடுக்கலாமென்றெண்ணித் திரும்பிப் பார்த்தபோது தேவர்க்கருள் செய்யவே பிராமணச் சிறுவனின் உருவத்துடன் வரும் பிள்ளையாரைக் கண்டு அவரிடங் கொடுத்தான் இராவணன்.

பிள்ளையார் தாம் வாக்களித்தபடி மும்முறை கூப்பிட்டும் அவன் வராமையால் சிவலிங்கத்தை நிலத்தில் வைத்துவிட்டார். இராவணன் வந்து தனது இருபது கரங்களாலும் அச்சிவலிங்கத்தைத் தூக்கியுந் தூக்கமுடியாது கோபங்கொண்டு தனது இருபது கரங்களாலும் பிள்ளையாரைக் குட்டஓங்கினான். அப்போது அப்பிள்ளை தமது நிஜரூபத்தைக்காண்பித்தபோது இராவணன் ஓங்கிய தனது கைகளினால் தனது சிரங்களில் குட்டி விநாயகப்பெருமானை வணங்கினான்.

விநாயகப்பெருமானை மூன்று சந்தர்ப்பங்களிற் கரங்களினால் சிரசில் குட்டி வணங்கியதை ஞாபகப்படுத்துவதற்காகப்போலும், பிள்ளையாரை வணங்கும்போது எல்லாரும் மும்முறை குட்டி வணங்குவது வழக்கமாக இருக்கிறது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சாதி தர்மங்களைப் பற்றுவையாமல் கடமையென்றெண்ணிச் செய்வதனால், முத்தியடையலாமென்று கர்மயோகத்தைப் பிரதானமாகக் கூறும் பகவற் கீதையைத் தன்னுள் அடக்கிய மகாபாரதத்தை, வேதவியாசர் சொல்லத் தமது கொம்பையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதித் தந்தருளியவரும் கருணை பெரு வள்ளலாகிய கணபதியேயாவர்.

இப்படிப் பல அருள்கள் புரிந்தியாக மூர்த்தியைப், பயன் கருதாது, வழிபடுதலே மிகச் சிறந்த முறையாகும். ஆனால் அப்படி வழிபடுபவர் மிகச் சிலரேயாவர். ஆகையால் நாமெல்லோரும் உய்யும் வண்ணம் அவர் கருணையை நாள் தோறும் நினைந்து உய்யும் வண்ணம் நினைந்து துதித்து வணங்கி இஷ்ட சித்திகளைப்பெற முயற்சிக்க வேண்டும்,

அப்படி ஒவ்வொருநாளும் அப்பிரணவ சொரூபியை வணங்க இயலாதவர்கள் மாசந்தோறும் வருஞ் சதுர்த்தியிலேனும் அன்புடன் வழிபடல வேண்டும். அதுவுமியலாதவர்கள் ஆவணிமாசப் பூர்வபட்சச் சதுர்த்தியிலேனும், நோன்பிருந்து முறைப்படி வழிபடல்வேண்டும்.

இதுபோலவே மாசி மாதத்தில வருஞ் சதுர்த்தியும் செவ்வாய்க்கிழமையோடு சேர்ந்துவரும சதுர்த்தியும் விசேஷமானதாகும.

விநாயகமூர்த்தியை வழிபடும் போது அறுகேனும் வன்னியிலையேனும், மந்தார மலரேனுஞ் சாத்தி வழிபடுதல மிகுந்த பலனைத் தருமென்று சொல்லப்படுகிறது. பிள்ளையாருக்கு தேங்காய், மோதகம், பால், தேன, சர்க்கரை, பருப்பு, என்பனவற்றையே விசேஷமாகநிவேதனம் வைத்து வணங்குவது வழக்கம்.

சுப்பிரமணியப் பெருமானே சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்துத் தம் முன்னவனாகிய தாபமெய்ப்பெருமானிடமிருந்து தமது மயில வாகனத்தைப் பெற்றாரென்றால் இவ்விரதம் திருநாளானது தொல்லுலகிற் பெருமையுடையதாயிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

ஐங்கரனாகிய விநாயக மூர்த்தியானவர் தம்மிடத்தில் குறையிரந்து நின்ற பிரமாவிற்கருள் செய்யுஞ் சமயத்தில், சந்திரன் விநாயகப் பெருமானைச் சிறிது அவமதித்துச் சிரித்தபடியால் அப்பெருமான் சிறிது கோபங்கொண்டு, சந்திரனைப் பார்த்து "உனதொளியுமழுங்கி உன்னைப் பார்ப்பவரும், தீங்கெய்தக் கடவரென்று சபித்தார்" ஆனால் சந்திரன்பட்ட துன்பத்தைக்கண்டு, இந்திரன் அப்பெருமானை வேண்ட அதற்கு விநாயகமூர்த்தி கருணைகூர்ந்து அவனதொளி முன்போற் பிரகாசிக்கவும் ஆவணிச் சதுர்த்தியைத்தவிர மற்றைநாட்களில்பார்ப்பவர்கள் தீங்கடையமாட்டார்களென்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

இதனாற்போலும் சதுர்த்திப் பிறையைப் பார்த்தால் வீண்பழி கேட்கவேண்டி நேரிடுமென்று சொல்வது உலக வழக்கம். ஆனால் சந்திரன், சதுர்த்தி விரதத்தை முறைப்படி அனுட்டித்து, மெய்யன்போடு விநாயகப் பெருமானைப் பூசித்துத் தனது சாபநீக்கம் பெற்றுக்கொண்டான். இப்படியான பல மகத்துவங்கள் நிறைந்த சதுர்த்தி விரதம் அனுட்டிக்கும் முறையைச் சுருக்கிக் கூறுகிறேன்.

இச் சதுர்த்தி விரதமானது ஆவணிமாசப்பூர்வ பக்கச் சதுர்த்தி தொடங்கி புரட்டாசிமாதப் பூர்வ பக்கச் சதுர்த்தி வரைக்குமுள்ள முப்பத்தொரு நாட்களும் அனுட்டிக்கவேண்டும்.

ஆரம்பிக்குந் தினத்தில் வைகறையிலெழுந்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சுத்தமாக அபிஷேகத் திரவியத்துடன் ஓர் சுத்தமான பூசையறையையுண்டாக்கி, அதிற் பொன்னாற் செய்த விநாயக மூர்த்தத்தையும், சுத்தமான மண்ணினால் செய்த விநாயக மூர்த்தத்தையும், எழுந்தருளச்செய்து கும்பம் வைத்து, முறைப்படி அபிஷேகபூசைகள் செய்து முப்பதுநாளுமுபவாசமிருந்து அப்பெருமானின் மந்திரங்களில் ஒரு மந்திரத்தை நூறுபிரமுறை செபித்து, முறைப்படி தர்ப்பணஞ்செய்யும்போது இயல்பிற்கேற்க இயன்றளவு தானமுஞ்செய்து முப்பத்தோராம்நாள பந்துமித்திரர் விருந்தினர்களோடும், அதிதிகளோடும் உணவருந்தல் வேண்டும்.

முப்பது நாட்களும் உபவாசமிருக்க இயலாதவர்கள் முதலநாள் விதிப்படி உபவாசமிருந்து மற்றைய நாட்களில அவிசேனும், பால் பழமேனும் ஒவ்வொரு நேரம் உட்கொண்டு முப்பத்தோராம் நாள் உணவுஅருந்தல்வேண்டும்.

நூறுபிரமுருச் செபிக்கச் சக்தியற்றவர்கள் பதினாயிரம் அல்லது ஆயிரம்உருச் செபிக்கலாம். தானஞ் செய்ய இயலாதவர் இருபத்தொரு பேருக்கேனும் அன்னதானஞ் செய்தல்வேண்டும. முப்பத்தொரு நாட்களுக்கு விரதமனுட்டிக்க இயலாதவா ஆவணிச் சதுர்த்தியிலாவது முறைப்படி விரதமனுட்டித்தல் வேண்டும்.

இச்சதுர்த்தி விரதத்தை அனுட்டிப்பவர்கள் விநாயகப் பெருமானின் திருவருளைப்பெற்று வாழ்வார்கள்.

இன்று விநாயகர் கோவில்கள் தோறும் விசேஷ பூசைகள் நடைபெறும். நாமும் அப்பெருமானைத் துதிப்போமாக.

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூயமெய்ச், சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ் சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரத மான்மியம்

(ம. வே. தி. ச.)

(முற்றொடர்)

## சந்திரசேன் சனிப் பிரதோஷத்தில் உமா மகேச்சுரனைப் பூசித்தமை

தன்னைத் தாய் இரந்து அழைத்தலை அத்தப் புண்ணியக் குழந்தையானவன் அறிந்திலன்; பேதைமையோடு கூடிய தாயானவள் தன் குழந்தையின் மேலான மனநிலையை அறியாளாய், அவன் கேட்டுங் கேளான்போல் இருக்கின்றானென்று விபரீதமாக எண்ணிச் சீற்றங் கொண்டாளாய்த் தன் குழந்தையின் முதுகிற் கையினாற் புடைத்து அக்குழந்தை மணலினாலமைத்த கோயிலைக் காலினாற் சிதைத்து சிவலிங்கமாகப் பாவித்துப் பூசித்த கருங்கல்லையும் எடுத்துப் புறம்வீசி விட்டுக் கடிது தன் வீட்டிற்கு மீண்டாள்; தாய் தன்னை யடித்தமையையும் பொருட்படுத்ாது தியானத்திலிருந்த சிறுவன் தான் *சிவலிங்கமாகப் பாவித்துப் பூசித்த சிலையை எடுத்தெறிந்தமை கண்டு உள்ளம் பதறி ஓலமிட்டழுது திருவருளாற் சிறிதுநேரம் அயர்ச்சியடைந்தான். சிறிதுநேரம் சென்றபின் தான் கொண்ட அயர்ச்சி நீங்கி விழித்தெழுந்து நாற்புறமும் பார்த்தான். என்ன அற்புதம்! தங்கள் பழைய சிறிய குடில் ஒரு செம்பொற்றிருக்கோயிலாகவும், தன் தாய் சற்று முந்தி எடுத்து வீசிய சிலை சோதிமயமான திவ்விய சிவலிங்கமாகவும் விளங்குவதைக் கண்டான்; அதிசயமுற்றான்; ஆநந்தமடைந்தான், பரவசமானான். பெருமானுடைய திருவருட்டிறத்தை யெண்ணி யெண்ணி வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல் உள்ளம் நெக்கு நெக்குருக, உரோமஞ் சிலிர்ப்ப, உரை தடுமாற அச்சோதி இலிங்கத்தைத் தோத்திரஞ் செய்யலானான்:-

"தொல்லை வெம்பிறவிக் கடற்கரை
யேறத்
தொண்டெனும் அம்பியைக் காட்டும்
அல்லணி கண்டன் பூசனைப்பயனோ
அல்லது திருவிளை யாட்டோ,
முல்லையங்கண்ணி யெங்குல முதல்வர்
முறைசெய்த நல்வினைப்பயனோ,
எல்லையில் தவத்தோர் தமக்குமெய்தாத
தெளியனுக் கெய்தியதென்னோ"

"சிறியருக்கியல்பு தீவினையிழைத்தல்
சிறியவர் சிற்றிய லீதென்(று)
அறிஞருக்கியல்பு பொறுப்பதென்
றுரைப்பர்
ஆதலால் அடியனேனன்னை
நெறியிலாதிழைத்த சிற்றியல்பொறுத்தி
நிமலனே! கருணையங்கடலே!
மறியுறை கரத்து வரதனே" என்று
வாழ்த்தினன் மாசிலாத் தவத்தோன்.

"எம்பெருமானே! சிவதொண்டே பிறவிப்பெருங்கடல் நீந்துவதற்குச் சிறந்த தெப்பமாகுமென்பதை விளக்கியருளுந் திருநீலகண்டரே! தவத்தர்களுக்கும் மகாஞானிகளுக்கும் இலகுவிற் கிட்டாத பேறு, தமியேனுக்குக் கிட்டியதே! இது சிறியேன முறையறியாது செய்த பூசையின் பயனோ! இல்லையேல், இடையர்களாகிய எங்கள் குலத்தோர் செய்த புண்ணியப்பயனோ! அன்றேல் தேவரீருடைய அருள்விளையாட்டோ ஏழையேன் யாதென அறியேன்; சிறியோர் செய்யும் சிறுபிழையெல்லாம் பெரியோராகிற் பொறுப்பது கடனென்பர்; ஆதலால் எம் அன்னையே என்னைப் பெற்றவள் தன்னைப் பீடித்த அறியாமை காரணமாகத் தேவரீரின் தொண்டிற்குச் செய்த இடையூறாகிய பெரிய அபராதத்தைப் பொறுத்து அருள்புரிய வேண்டும்"

இச் சிறுவன் விஷயம் இங்ஙனமாக, அக் குழந்தையினுடைய தாயானவள் தங்கள் இல்லம் பொன்மயமாக விளங்குவதைக் கண்டு அற்புதமடைந்தாளாய்ச் சிறுவன்மாட்டெழுந்தோடிச் சென்று அவனுடைய சிவபத்தித்திறத்தையும் சிவனுடைய திருவருட்டிறத்தையும் உணர்ந்து அச்சமும் அன்புமுடையாளாய்த் தெய்வத்தை வழுத்திச் சிறுவனைத் தழுவி ஆநந்தமடைந்து உடனே அரசன் மாளிகையை அடைந்து சிவபத்தியிற் சிறந்த அந்த அரசனுக்கு, நிகழ்ந்த திருவருட்செயல் முழுவதையும் பணிவுடன் மொழிந்தாள். தெய்வச் செயலைச் செவிமடுத்த சந்திரசேனனெனப்படும் அந்த அரசன் உடனே வியப்புடனெழுந்து தன் மந்திரி பிரதானிகளும் பரிவாரத்தினருஞ் சூழ்ந்துவரப் பயபக்தியுடன் அந்த நவமான திருக்கோயிலை அடைந்து வலம் வந்து சந்நிதானத்தை யடைந்து அடியற்றமரம்போல வீழ்ந்து வணங்கியெழுந்து, விபரமாக வரலாறு முழுவதையும் அச்சிறுவன் வாயிலாக அறிந்து அவனைத் தழுவிச் சந்திரமௌலீசர் திருவடிகளைப் பின்னரும் பன்முறை வழுத்தினான். இந்தத் திருவருட்செயலையெல்லாம் கேள்வியுற்று அம்மாநகரிலுள்ள சனங்களும் உச்சேனி நாட்டிலுள்ள மக்களும் அற்புதத்தோடும் ஆநந்தத்தோடுங் கூடியவர்களாய் அத்திருக்கோயிலை வந்தடைந்து ஆங்குக்கோயில்கொண்டருளிய சிவலிங்கப்பெருமானைத்தரிசித்துவணங்கினர். இடையர்குலச்சிறுவனுடைய பத்தித்திறத்திலேயே அப்புண்ணிய ஸ்தலமொன்று புதிதாய்த் தோன்றியதென்று அச்சிறுவனைப் பாராட்டினர்.

அந்த நாடெங்கும் இவ்வற்புதமான சரித்திரம் பரவியதால், அப் பட்டினத்தை முற்றுக்கையிட்டு நின்றவர்களாகிய பகையரசர்களும் இதனைக் கேள்வியுற்று ஆச்சரியமும் அச்சமும் அடைந்தார்கள். இராக்காலம் நீங்கச் சூரியனும் உதயஞ் செய்தான். பகையரசர்கள் இப்படியற்புதம் நடப்பது மெய்தானோ என்பதை அறியவேண்டித் தங்கள் ஒற்றர்களை அந்நகருட் சென்று உண்மையை அறிந்துவரும்படி ஏவ, அவ்வொற்றர்கள் பட்டினத்துட் சென்று விபரம் முழுவதையும் உள்ளபடி உணர்ந்து மீண்டுவந்து தத்தம் அரசர்க்கு விண்ணபஞ் செய்தனர். கேட்ட வேற்றரசர்கள் வெருவினார்கள்; "சிவபத்தியிற் சிறந்த இந்த அரசனுடன் நாம் யுத்தஞ்செய்ய வந்தமை பெருந்தவறாகும்" என்று பச்சாத்தாபப்பட்டார்கள்; அனைவரும் ஒருங்கு சேர்ந்து யோசித்துத் தம் போர்முயற்சியைத் துறந்து சந்திரசேனனுடன் சமாதானஞ்செய்து சிவபத்தனாகிய அவனுடைய நட்பைத் தாம்பெற்றாலே ஈடேறலாகுமென நிச்சயித்தனர். அவ்வேந்தர்கள் தங்கள் சதுரங்க சைநியங்களையும் தத்தம் நாட்டிற்கு மீண்டுசெல்ல விடுத்து, நிராயுதர்களாய்ச் சமாதான முறையிற் சந்திரசேனனைக் காணும்படி வந்தார்கள். அவ்வரசர்கொண்ட நோக்கத்தையுணர்ந்த சந்திரசேனன் அவர்களை அன்புடன் வரவேற்று மகாளேச்சுரமென்னுந் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று அம் மகாளேச்சுரரைத் தத்தானும் வணங்கி அவர்களையும் வணங்கச்செய்து பின்னர்ப்புதிதாகத் தோன்றிய அற்புதத் திருக்கோயிலில் அவர்களுக்குக் காட்டி அங்கெழுந்தருளிய சோதிலிங்கமாகிய பெருமானையும் வணங்கச் செய்து அவைகளுக்கெல்லாம் காரணமாய்நின்ற சிவபக்தியிற் சிறந்த சிவனையும் அரசர்களுக்குக் காட்ட, அவ்வரசர்களனைவரும் அற்புதரோய் அவனை வணங்கித் துதித்தனர். பின்னர்ச் சந்திரசேனனும் ஏனைய வேந்தரும் அந்த ஆயர் சிறுவனைப்பாராட்டி "நீயே இன்றுதொடக்கம் இந்த ஆயர்பாடியில் உள்ளாரெவர்க்கும் தலைவனாகுதி" என்றுகூறி அநகன் அவனை ஆயர்குலத்திற்கு அரசனாக்கினார்கள்.

(தொடரும்)

* [சென்ற திங்கட்கிழமை (6.9.43) வெளிவந்த "பிரதோஷ மான்மியம்" என்ற விஷயத்தில் "...எங்கள் சண்டேசுர நாயனார் செய்தவாறு, மணலினாலே சிவலிங்கம் அமைத்து..." என்றதைத் தவிர்த்து "ஒரு கருங்கல்லை எடுத்துச் சிவலிங்கமாகப் பாவித்து அமைத்து" எனச் சேர்த்துப்படிக்கவும். ப—ர்]

# சுகதேகிகளான வாலிபர் சோம்பித்திரிவதேன்?

## "ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளை மீட்கும் நடவடிக்கையில் இறங்குநாள் நெருங்குகிறது"

நீர்கொழும்பு செப் 10—

"இலங்கைக்குப் போதிய உணவை நாம் ஒழுங்காகப் பெற்று வருகிறோம். ஆனால், அவைகள் அபாயம் நிறைந்த கடல்களுக்கூடாகத் தொலை தூரத்திலிருந்து வரவேண்டியிருக்கின்றன" என்று நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியில் இன்றுமாலை நடைபெற்ற பாடசாலைகளின் உணவுக் கைப்பணிப் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் பிரதம தளகர்த்தர் ஸேர். ஜியப்ரே லேட்டன் கூறினார்.

இலங்கை வெகு தூரத்திலிருக்கும் நாடுகளின் உதவியை எதிர்பார்த்திருக்க வேண்டியிருப்பதையும் கப்பல்களையே எல்லாவற்றுக்கும் நம்பியிருக்கவேண்டியிருப்பதைப் பற்றியும் அவர் குறிப்பிடும்போது இலங்கையிலுள்ள ஒவ்வொருவருடைய மனங்களிலும் இப்போதுள்ள பிரச்னை உணவுப் பிரச்னையென்று கூறினார். தொடர்ந்து அவர் கூறியதாவது:—

### இங்கிலாந்தைப் பின்பற்றுக

"நாம் ஒவ்வொருவரும் நம்மைக் கவனித்துக்கொள்ள வேண்டும். நமக்கு நாமே உதவி செய்துகொள்வதற்காக இங்கிலாந்தை உதாரணமாகப் பின்பற்ற வேண்டும். யுத்தத்துக்கு முன் பெருந்தொகையான உணவுபொருள்கள் இங்கிலாந்துக்கு வெளிநாடுகளிலிருந்துதான் வரவேண்டியிருந்தது. யுத்தம் ஆரம்பித்ததும், சத்துரு நீர்மூழ்கிகளின் அபாயம் அதிகரித்தது. கப்பல்களும் யுத்த சேவைகளுக்காகத் தேவையாயிருந்தன. இதன் பயனாகத் தீர்க்கப்படவேண்டிய பல பிரச்னைகள் தலையெடுத்தன. உணவுப் 'பிரச்னை' சம்பந்தமாக உறுதியோடும் தைரியத்தோடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியிருந்தன.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டதன் பயனாக, இங்கிலாந்தின் உணவு உற்பத்தி இருமடங்காக அதிகரித்தது. தியாகத்தினாலும் விடா முயற்சியினாலும் அவர்கள் உணவுப் பிரச்னையைச் சமாளித்து விட்டனர். அந்த நிலைமையில் ஆக்கிரமிப்புப் பயமும் அங்கு இருந்துவந்தது. சத்துரு இரவும் பகலும் இடைவிடாது வெடிகுண்டு வீசிக்கொண்டிருந்தான். இவ்வளவு கஷ்டங்களுக்கும் சங்கடங்களுக்கும் மத்தியில் பிரிட்டிஷ் மக்கள் தங்களுடைய தளராத ஊக்கத்தினால் தங்களுக்குப் பேரபாயம் விளைக்கக் காத்திருந்த பட்டினிப்பேயை ஒழித்துவிட்டனர். இதனைக்கண்ட நாகரிக உலகத்தினரனைவரும் பிரமிப்படைந்தனர்.

அவசரமான காரியம்

"இலங்கை மக்கள் இத்தகைய ஒரு பெரிய முயற்சி செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. யுத்தகளத்திலேயே இருந்த அனேக தேசங்களை விட மிக அனுகூலமான ஒரு நிலைமையில, நமது நாடு இருக்கிறதென்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்கிறோம்.

"க்கிரமிக்கப்பட்ட நாடுகளில் கஷ்டப்படும் மக்களை விடுவிப்பதற்காகச் சத்துருமீது பலத்த தாக்குதல் நடத்தவேண்டிய நாள் நெருங்கி வருகின்றது. அதற்காகப் பெருந்தொகையான கப்பல்கள் தேவைப்படும். ஆதலின், நமக்குத் தேவையான உணவுகளை நாமே உற்பத்தி செய்துகொண்டு கப்பல்களை யுத்த வேலைகளுக்காக விடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

இதுதான் நமக்கு அவசரமானதும் பிரதானமானதுமான காரியமாகும். இலங்கையிலுள்ள பாடசாலைகளால் இந்தக் காரியம் மிக அக்கரையோடும் ஆர்வத்தோடும் கவனிக்கப்பட்டு வருவதையிட்டு நான் மிக மிகச் சந்தோஷிக்கிறேன்." இந்தப் பாடசாலைகளின் முயற்சி நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அளிக்கப்பட்டு வரும் மிகப் பெரிய உதவியென்று கருதப்படும்.

வாலிபரின் கடமை

"நான் விஜயஞ்செய்த கிராமங்களொவ்வொன்றிலும் நல்ல திடகாத்திரமான வாலிபர்கள் பலர் அங்குமிங்குஞ் சோம்பேறிகளாகத் திரிவதைக்கண்டிருக்கிறேன். இவர்களெல்லோரும் உணவு உற்பத்தியைச் சிரத்தையோடு கவனிப்பார்களாயின், இலங்கை தனது எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. நல்ல சுதேசிகளான ஆண்கள்-உணவு உற்பத்தி விஷயத்திற் பிரயோசனமானமுறையில் மக்களுக்கு உதவிசெய்யக் கூடியவர்கள். சாராயத்தவறணைகளின் முன்பு கூட்டங் கூட்டமாக நாள் முழுவதும் நிற்பதை எவரும் காணச் சகிக்கமாட்டார்கள்.

இறுதியிற் பாடசாலைகளின் முயற்சிக்காக அவர் அவைகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, எதிர்காலத்தில் அவைகள் ஊக்கத்தோடு உணவைப் பெருக்க உழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

# கல்கத்தா பட்டினிச் சாவுகள்

## ஞாயிற்றுக்கிழமை 30 பேர்கள் பலி

கல்கத்தா செப் 6—

விளம்பரப்பகுதி டைரெக்டர் ஞாயிற்றுக்கிழமை பட்டினி விவரம்பற்றி அறிவிப்பதாவது:-

இரு ஆஸ்பத்திரிகளில் அநுமதிக்கப்பட்டவர்கள் 131. மூன்று ஆஸ்பத்திரிகளில் மரணமடைந்தவர்கள் 30; விடுவிக்கப்பட்டவர்கள் 15.

# திருப்பூவணநாதருலா

2ம் பக்கத் தொடர்ச்சி

..த்து எதுவோ?" என்று ஐயர் புன்முறுவல் பூப்பதைப்பார்............ விம்பவாய் வள்ளியை முத்தங் கொள்ளும் மகவாகிய முருகனைப் பெற்றோனாகிய அப்பெருமானுடைய மேனியைக்கண்டு அவள் அள்ளி முத்தங்கொள்ளும் அன்பினைப்பார்" என்றென்று ஓவநூல் வல்லோன் வகுத்து உரைத்தான். உரைக்கும்போதே, காதார் குழலாளும் விரகம் புறத்தே பொசிய, குழைந்து அறிவு கொள்ளைபோய், நெஞ்சஞ் சருகானாள். அவ்வமயம் பூவணத்துப் பெருமானுடைய பொலந்தேரும் மறுகி லணைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதி நினைவு விழா

**'பார்த்தவன்'**

பாரதியின் கனவுக ளெல்லாம் இப்பொழுது உருவாகிக் கொண்டு வருகின்றன என்பதை நமது யாழ்ப்பாணம் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கத்தார் எடுத்துக் காட்டுகின்றனர். நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் கில்னர் மண்டபத்திலே டை விழா ஆரம்பித்தது. கூட்டத்திற்கு நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவரவர்கள் தலைமை வகித்தார்கள். சுவாமி விபுலானந்தா அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

கூட்டத்திலே பண்டித ரொருவர் (திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்) பேசினார்; ஆங்கில மறிந்த பெரியா ரொருவர் (திரு. சோ. நடராசா அவர்கள்) பேசினார்; தமிழாசிரியர் ஒருவர் (திரு. த. சுப்பிரமணியம் அவர்கள்) பேசினார்; குழந்தைகூட ஒருத்தி (செல்வி ந. கமலாசனி) பேசினாள். இதைவிட மறுமலர்ச்சி வேறென்ன? தமிழ் நாட்டில் மறுமலர்ச்சிக்கு அத்திவார மிட்ட பாரதியின் நினைவுவிழாவிலே மறுமலர்ச்சிச் சங்கத்தார் கூட எதிர்பாராத வகையில் இந்த அதிகப்படியான விஷயங்கள் வந்து குவிந்ததும் போதாமல், அவருடைய பாடல்களை இசையோடு பாட ஒரு 'ரதி'யும் 'ரத்தின'மும் முற்பட்டு வந்தமை மிக மிகப் பொருத்தமா யிருந்தது. செல்வி ரதி சுந்தரம் பிள்ளையும் திரு. வா. இரத்தினம் பிள்ளையும் பாரதியின் பாடல்களைச் சிறந்த வர்ண மெட்டுக்க ளமைத்துப் பாடினார்கள். திரு. இரத்தினம் பிள்ளை யவர்களும் அவருடைய சிஷ்யன் திரு. அழகைக்கோனும் பாடிய ராகமாலிகை பாரதி பாடலை இன்னும் எடுத்துக் காட்டியது. பாரதியின் கவிதையில் மறுமலர்ச்சி உண்டாயினும் இந்த இசைவிருந்து சபையோர்க்கு ஒரு புதுமலர்ச்சியாக இருந்தது.

பண்டிதரவர்கள் தம்முடைய ஹாஸ்யமான பேச்சிலே பாரதியின் அரிய கவிதா சக்தியை எடுத்து மிக நயமாக அங்கங்கு உதாரணங்களோடு பேசினார். ஹாஸ்யமென்றால் வெறும் ஹாஸ்யமல்ல அவ்வளவும் மிக ஆழ்ந்த கருத்துக் கொண்ட விஷயம். 'ஷெல்லி', 'கீட்ஸ்' போன்ற மேல் நாட்டுப் புலவர்களையும் பாரதியையும் பண்டிதர் எடை போட்டுக் காட்டினார். (ஆங்கில வறிஞர்கள் ஒரு வேளை முகத்தைச் சுளித்தாலும்) பண்டித ரவர்கள் எடை போட்ட விஷயத்தில் பாரதி பக்கத்தட்டு 'ஷெல்லி', 'கீட்ஸை விடக் கனம் கூடியதாகவே காணப்பட்டது. பாரதியை ஏன் ஒரு மகாகவியாகக் கொண்டாடப்படாது என்று பல எடுத்துக் காட்டுகளோடு கேட்டார் பண்டிதர்; நாமுந்தான் கேட்கிறோம்.

கூட்டத்தைப் பார்க்க வென்று அங்கு வந்திருந்த நவாலியூர் சோ. நடராஜா அவர்களை மறுமலர்ச்சிச் சங்கத்தார் இழுத்துக் கொண்டு போய் மேடையிலே நிறுத்தி விட்டார்கள். அபாரப் பேர்வழிகள் தானப்பா இந்தச் சங்கத்தார்! என்ன செய்யலாம் பாவம் நடராஜா அவர்களும் சங்க நோக்கத்தையும் பாரதியாரையும் தொடர்பு படுத்திப் பேசினார். இதனாலேயே சங்கத்தாருக்கு நிறைய மனப் பூரிப்பு ஏற்பட்டிருக்கு மென்று நம்புகிறோம்.

நடராஜா அவர்களுக்குச் சங்கத்தார் போட்ட தண்டனைக்குப் பதில் தண்டனையாகச் சங்கத்தாருக்கே போட்டார். ஆசிரியர் திரு. த. சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரிய ரவர்கள் வலிந்து வந்து பேசப்போகிறேனென்று பேசினார். உண்மையிலே அவர் பேசியதும் ஒரு தினிசு விஷயம். பாரதியை மாத்திரமல்ல ஏனைய இக்காலப் புலவர்களைப் பற்றியும் (தேசிக விநாயகம்பிள்ளை நாமக்கல், சுத்தானந்த பாரதியார்) பேசினார். அந்தப் பேச்சில் அவர் சங்கத்தார்க்கு ஒருகட்டளை பண்ணியதாகிறது. பாரதி இருக்கும் வரையில் தமிழ் நாட்டில் அவரை யாரும் கொண்டாடினாரில்லை. இப்பொழுது—அதாவது அவர் மறைந்த எத்தனையோ வருஷங்களான பிறகு தான் நினைவுவிழா, தினவிழா, விழா என்று பலபடக் கொண்டாடுகிறார்கள். ஆனால், இனிமேலாவது இக் காலப் புலவர்கள் மறையும்வரை பார்த்துக் கொண்டிராமல் நம்மிலொருவராய் அவரும் வாழும் பொழுதே மேன்மை செய்ய வேண்டும் என்று குத்திக் காட்டுவது போன்றிருந்தது அவருடைய பேச்சு. சங்கத்தார் அதனை மறக்கமாட்டார்கள் என்றெண்ணுகிறோம். பண்டிதர் கிருஷ்ணபிள்ளை யவர்கள் பேசும்போதும் தலைமை வகித்த புலவரையே ஏன்? கொண்டாடக் கூடாது என்று கேட்டதும் கவனத்திற் குரியது. இந்த விஷயத்தில் பண்டிதரவர்களும் முந்திய தமது பேச்சில் பேசியிருந்தார்.

கடைசியில், மறுமலர்ச்சிச் சங்கத்தார் சார்பாக நன்றியறிதல் கூறப்பட்டது. நன்றியறிதலின்போது கூறப்பட்ட ஒரு விஷயத்தை இங்குக் காட்டாமல் இருக்க முடியாது. பாரதி பாடலைச் சிறப்பாகப் பாடி உபந்நியாசம் செய்யக் கூடிய ஒருவர் யார் என்றால் யாழ்ப்பாணத்தில் திரு. க. கி. நடராசா அவர்களே யாவர் என்று சொல்லுவார்கள். ஆனால், இந்த விழாவின்போது அதை விடச் சிறந்த உபந்நியாசம் செய்யும் வல்லமை இன்னொரு ஆளுக்கு உண்டென்பது வெளியாகி விட்டது. அந்த ஆள்தான் அதே நடராஜா அவர்களுடைய செல்வக் குழந்தை செல்வி கமலாசனி என்பது.

எல்லோருக்கும் நன்றிகூறி யானதும் தலைவர் முடிவுரையில் சங்கத்தாரை வாழ்த்தினர். பரிசுகள் கொடுப்பதாகக் கூடச் சொன்னார். இற்றில் தமிழ் வாழ்த்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

—கடித.

---

### 'அகௌண்டேண்டுக'ளுக்குப் பயிற்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதிரியான திட்ட மொன்றை வகுத்து நடைமுறைக்குக் கொண்டு வருவதைப் பொக்கிஷக் காரியதரிசியும் ஆதரிக்கிறார்.

இப்பொழுது 'அக்கௌண்டெண்ட்' வேலைக்குப் பயிற்சி பெற்று வருபவர்களுக்கு யுத்த நிலைமை காரணமாகத் தராதரப் பத்திரம் பெறுவது கஷ்டமா யிருக்கிறது. எனவே, இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் திட்டமொன்றை வகுக்கும்படி வியாபாரப் பகுதி டைரக்டரைத் தொழில் நிர்வாகசபை கேட்டுக் கொண்டிருக்கிறது. அதாவது, அத்தாட்சிபெற்ற கம்பெனிகளில வேலைக் கமர்ந்து பயிற்சி பெற்றும் பரீக்ஷை எழுதிப் பட்டம் பெற முடியாமல் தவிக்கும் இளைஞர்களுக்கு உதவும்படியாக ஒரு பயிற்சித் திட்டம் வகுக்கப்படுமென்று தெரிகிறது.

---

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத் தட்டு)

**செவ்வாய் செப் 14**

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 ப்ரேம கீதம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம். எஸ். செல்லம்மாள் ஸ்ரீனிவாசன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ஆர் கிருஷ்ணமாச்சாரி வீணை 2 தமிழில் செய்திகள் 2–05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 டி ஆர் கிருஷ்ணமாச்சாரி வீணை 5-45 இசைப்பயிற்சி 6 எம். எஸ் செல்லம்மாள் ஸ்ரீனிவாசன் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ரேடியோ நாடகஇசை 8 டி ஆர்மகாலிங்கம்புல்லாங்குழல்9-15 காந்திலால் ஸமர்த் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 திரைகானம் † 10 திருச்சி வாத்ய கோஷ்டி 10-30 முடிவு.

**புதன் செப் 15**

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 காலை இசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே. ராமஸ்வாமி பாட்டு 9 முடிவு.

1கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே. ராமஸ்வாமிபாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 வி சந்தானமய்யா வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 டி நமசிவாயம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்யக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள்7-45மோஸ்கோ பொருட்காட்சிச் சாலையில் நாடகம் 7-55லீலா சிட்னிஸ் † 8 சந்தானமையா வயலின் 8-30 அமெரிக்க வாக்து 8-45 டி வி நமசிவாயம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 தில்நுபா வீணை 10 பி பி ஸி ஆங்கில நிகழ்ச்சி 10-30 முடிவு.

---

## நேசதேசத்தினரிடம் முசோலினி

இத்தாலிய பத்திரிகை கூற்று

லண்டன் செப் 10—

முசோலினி நேசதேசங்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் வட ஆபிரிக்காவுக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கிறு ரென்று கொரேரிடெல்லாஸோர் என்ற பத்திரிகை கூறுகிறது.

---

## மதுரையிலும் பட்டினிச் சாவு

மதுரை செப் 6—

மேலச்சித்திரை வீதி மேடையில் 2 நாட்களாக ஆகாரமின்றிப் பசிப்பிணியின் கொடுமை காரணமாக ஒருவர் கவனிப்பாரற்றுக் கிடந்து 2ந்தேதி மரணமடைந்தார். இன்றும் அதே இடத்தில் ஒரு ஸ்திரீ பட்டினியால் மயங்கிப் பரிதபித்துககொண்டிருந்தாள்.

---


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
பிரதிநிதிப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)



குறைந்த விலையில் **துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

**K. A. இரத்தினசிங்கம்,**
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44



# அறிவித்தல்

குழந்தைகளுககுக் காத்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆதிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம் (மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளயகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30, 11-5.43—10-11.43)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 13, September, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org